உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி

# மெட்ரோ ரயில் நிலையத்தில் சைக்கிள் பேரணி ஏற்பாடு

■ சென்னை

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.

உலக சுற்றுச்சூழல் தினம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில்மெட்ரோரயில் நிறுவனம் சார்பில் திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷெனாய் நகர் வரையில் நேற்றுசைக்கிள்பேரணிநடத்தப்பட்டது. சுற்றுச்சூழல், பூமியை பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு வாசகங்கள், பதாகைகளை ஏந்தி சென்றனர். இந்த பேரணியில் 50-க்கும் மேற்பட்ட மெட்ரோ ரயில் ஊழியர்கள் பங்கேற்றனர். இதற்கு முன்பு கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் 150 மரக்கன்றுகள் நடப்பட்டது குறிப்பிடத்தக்கது.